ரீல்ஸ் த.வெ.க. ஆட்சியில்

பருப்பு முதல் பாமாயில் வரை அனைத்திலும் ஊழல் நடக்கிறது!

சேலத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

சேலம், அக்.19-

சேலம் மத்திய மாவட்ட திமுக மற்றும் சேலம் மத்திய மாவட்ட திமுக கருங்கல்பட்டி பகுதி திமுக சார்பில் திமுக முப்பெரும் விழா பொது கூட்டம் சேலம் தாத காபட்டி பகுதியில் நடை பெற்றது.

சேலம் மத்திய மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் தலைமையில் நடை பெற்ற இந்த கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

சேலம் ராஜேந்திரன் பேச்சு

முன்னதாக கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன், தமிழகத்தை பொருளாரதாரத்திலும், தொழில் துறை, கல்வி துறை என அனைத்து துறைகளிலும் நம்பர் ஒன் என்ற நிலையில் தமிழகத்தை மாற்றியவர் திமுக தலைவர் ஸ்டாலின் என்றும் ஆனால் தற்போது நடைபெறும் நடிகர் விஜய் ஆட்சியில் மின் வெட்டில் முதலிடம், பொருளாதார வீழ்ச்சியில் முதலிடம், பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாததில் முதலிடம், என்று மக்கள் விரோத ஆட்சி நடத்துவதில் முதலிடத்தில் தமிழகத்தை நடத்தி வருகிறார் என்று பேசிய அவர், மின்சாரத்தை இந்திய துணை கண்டத்திலேயே வேறு எங்கும் வாங்காத விலைக்கு மின்சாரத்தை வாங்கி பண வீழ்ச்சிக்கு வித்திட்டு உள்ளார் என்றும் இந்த ஆட்சி நீடிக்காது என்றும் விரைவில் மக்களால் தூக்கி எறியப்படும் என்றும் அவர் பேசினார்.

தி.மு.க.வை அழிக்க முடியாது!

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசும் போது, 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த எழுச்சி தற் போது ஏற்பட்டு உள்ளது. பழைய தி.மு.க. உருவாகி வருவது மிக பெரிய நம் பிக்கை பிறந்து உள்ளது. அண்ணா விருது பெற்ற சேலம் மாவட்ட அவை தலைவர் சுபாஸை பாரட்டை பேசிய அவர் தி.மு.க.வில் தொடர்ந்து பயணித்தால் அனைவருக்கும் விழா எடுக்கபடும் என்று உறுதி அளித்த அவர், தற் போது தி.மு.க.வை அழிக்க நினைப்பவர்கள் எல்லாம் சுபாசு போன்றவர்கள் இருக்கும் வரை நடக்காது என்றும் தி.மு.க.வை அழிக்க நினைத்து பேசியவர்க ளுக்கு மலர் வளையம் வைத்தது தி.மு.க. என்றும், ஆட்சியில் இல்லாமல் இருக்கலாம் ஆனால் தி.மு.க. சாதனைகளை யாராலும் அழிக்க முடி யாது என்றார்.

ஒரு குடும்பத்தில் ஒரு



வர் படிப்பதற்கே வழியில் லாமல் இருந்த நிலையில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் பட்ட படிப்பு படிக்க காரணமான கட்சி தி.மு.க. என்று பேசிய அவர், இன்றைய இளைஞர் கள், பெண்களுக்கு இது தெரியாமால் தான் கடந்த தேர்தலில் வாக்களித்து விட் டனர் என்றார்.

என்ன மாற்றம் கண்டீர்கள்!

ரீல்ஸ் மோகத்தில் இருக் கும் இன்றைய இளைஞர்க ளுக்கு கடந்த கால வரலாறு தெரியாமல் உள்ளது என் றும் இந்த 4 மாதத்தில் என்ன மாற்றத்தை இந்த மக் கள் கண்டார்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், அரிசி விலை பல மடங்கு உயர்ந்தது தான் காரணம் என்றும், மின் கட்டணம் உயர்வு போன்றவைகளும் தான் சாதனை என்று ஊழலை ஒழிப்பேன் என்று கூறிய இந்த ஆட்சியில் லஞ் சம் அதிக அளவில் இருப்ப தாக குற்றம் சாட்டினார்.

மின்வாரியத்தில் ஊழல்!

பெரியார் நூலகம் கட்டி யது குறித்து பேசிய விஜய் அரசு பணத்தில் இருந்து தான் கட்டியதாக கூறி உள் ளார்..ஒரு முதலமைச்சர் அரசு பணத்தில் தான் திட் டங்களை நிறைவேற்ற முடி யும் என்பது கூட தெரியா மல் உள்ளார் என்றும் கடந்த ஆட்சியில் மக்களுக் காக ஒரு யூனிட் மின்சாரத்தை 20 ரூபாய்க்கு வாங்கும் டெண்டரை இந்த அரசு வந்ததும், ரத்து செய்து விட்டு தற்போது 35 ரூபாய்க்கு வாங்கியதற்கு காரணம் என்ன என்றும் இது விஜக்கு தெரியுமா என்று கேள்வி எழுப்பிய அவர், தணிக்கை குழு விசா ரணையில் பதில் சொல் லியே ஆக வேண்டும் என் றும் இதில் நடைபெற்று உள்ள முறைகேட்டினால் விஜயை சிறைக்கு அனுப்ப நிர்மல் குமாரும் ஆதவ் அர் ஜுனாவும் முடிவு செய்து விட்டனர் என்றார்.

மின்சார வாரியத்தில் நடைபெற்று உள்ள ஊழலை நிச்சயம் மக்கள் மத்தியில் கொண்டு செல் வோம் என்றும் பாமாயில் வாங்கியதில் 600 கோடி ஊழல் நடந்து உள்ளது என் றார்.. பருப்பு முதல் பாமா யில் வரை அனைத்திலும் ஊழல் நடந்து வருகிறது என்றும் இதனை தி.மு.க. சும்மா விடாது என்றார். விஜய் 5 நிமிடம் வந்தாலே போதும் என்று சொன்ன நிலையில் மாட்டு வண்டி ஓட்டவும் டீ கடைக்கு சென்று குடிக்க வைத்தது தி.மு.க. என்றார்.

கடந்த தேர்தலில் கூட் டணிக்கு கொடுத்த தொகு திகளில் தி.மு.க. நின்று இருந்தால் மேலும் பல தொகுதிகள் ஜெயித்து இருக்கும் என்றும் வரும் உள்ளாட்சி தேர்தலில் கூட் டணி இல்லாமல் தி.மு.க. தனியாக நிற்கும் நிலை உரு வாகி உள்ளதாகவும் பேசி னார்.

கோவை பெரியார் நூல கம், மெட்ரோ திட்டம் போன்ற தலைவரின் சாத னைகளை மக்கள் இப் போது தான் உணர ஆரம் பித்து உள்ளனர் என்று அவர் பேசினார்.

கூட்டத்தில் மத்திய மாவட்ட அவை தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த் திகேயன், தலைமை செயற் குழு உறுப்பினர் ராஜேந்தி ரன், தேர்தல் பணி குழு செயலாளர் தாமரை கண் ணன, கருங்கல்பட்டி பகுதி செயலாளர் சரவணன் உள் ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டக் கழக மூத்த நிர்வாகி

ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுருசாமி மறைவு!

முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி, மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கர பாணி, இ.பெ.செந்தில்குமார் அஞ்சலி!

திண்டுக்கல், அக்.19-

திண்டுக்கல் மாவட்ட திமுக மூத்த நிர்வாகி ரெட் டியார்சத்திரம் ப.க.சிவகுரு சாமி மறைவுக்கு முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரிய சாமி, அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், திண் டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதா னந்தம் ஆகியோர் ப.க.சிவ குருசாமி உடலுக்கு மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னர். 49 வருடங்களாக ரெட்டியார்சத்திரம் ஒன் றிய திமுகவை கட்டிக்காத்த அண்ணன் ப.க.சிவகுருசாமி அவர்களை இழந்துவிட் டேன் என்று முன்னாள் அமைச்சரும், திமுக துணை பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி உருக்கமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத் தில் உள்ள ரெட்டியார்சத்தி ரம் ஒன்றியம், டி.புதுப் பட்டி ஊராட்சிகிராமத்தை சேர்ந்தவர் சிவகுருசாமி. 1937ம் வருடம் பிப்ரவரி 27ம் தேதி பிறந்த அவர் இளம்வயதிலேயே திரா விட இயக்கத்தில் இணைந்து செயல்பட்டு வந் தார். அதன் பின்னர் திமுக வில் 1977ம்ஆண்டு முதல் 2026 இன்றுவரை ரெட்டி யார்சத்திரம் ஒன்றிய திமுக செயலாளராக பதவி வகித் துவருகிறார்.

1986ம் வருடம் ரெட்டி யார்சத்திரம் ஊராட்சி ஒன் றிய திமுக சேர்மனாக (ஒன் றியக்குழு தலைவர்) தேர்ந்தெடுக்கப்பட்ட ப.க.சிவகுருசாமி, கட்சி பணிகளில் தொடர்ந்து ஈடு பட்டு, 1991ம் வருடம் மாவட்டகவுன்சிலராகவும், அதன்பின்னர் தொடர்ந்து 2011 வரை ஒன்றியகுழு உறுப்பினராக பதவிவகித் துள்ளார். இரண்டு முறை ஒன்றிய பெருந்தலைவராக வும் இந்தியாவிலேயே 84 வயதில் 36 வருடங்களுக்கு பிறகு மீண்டும் ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டவராக ப.க.சிவகுருசாமி பெயர் பெற்றார். தற்போது சென் னையில் நடைபெற்ற திமுக மு ப் பெ ரு ம் வி ழ ா வி ல் ப.க.சிவகுருசாமி அவர்க ளின் கழக பணியை பாராட்டி திமுக தலைமை கழகம் அவருக்கு 'தந்தை பெரியார்' வழங்கியது. திமுக மாநில துணைப் பொதுசெயலாளர் ஐ.பெரி யசாமி அவர்களின் நம்பிக் கைக்குரியவராக இருந்து வந்த ப.க.சிவகுருசாமி அவர்கள் கடந்த சில நாட்க ளாக உடல்நலக்குறைவால் ம ரு த் து வ ம னை யி ல் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் 17.10.2026 அன்று காலை இயற்கை எய் தினார் என்ற செய்தி திண் டுக்கல் மாவட்ட தி.மு.க. வினரை பெரும் அதிர்ச்சி யில் ஆழ்த்தியது.

மறைந்த சிவகுருசாமி அவர்களுக்கு பிச்சை யம்மாள் (85) என்ற மனை வியும், சக்கரவர்த்தி மணி மாறன், தம்பித்துரை என்ற இரு மகன்களும், மணிமே கலை என்ற மகளும் உள்ள னர். ப.க.சிவகுருசாமி அவர் களின் மறைவு செய்தி கேட்டு தன் உடல் நிலை யையும் பொருட்படுத்தா தது, தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாள ரும், முன்னாள் அமைச்சரு மான ஐ.பெரியசாமி ப.க.சிவ குரு சாமியின் உடலுக்கு மாலை அணிவித்து கண் ணீர் மல்க அஞ்சலி செலுத் தினார். அப்போது நிர்வாகி கள் மத்தியில் பேசிய முன்னாள் அமைச்சர் ஐ. பெரியசாமி ரெட்டியார்சத் திரம் ஒன்றியத்தில் 49 வரு டங்களாக தி.மு.க. ஒன்றிய செயலாளராக பதவியில் இருந்து என் உடன் பிறந்த சகோதரரை போல் என்னி டம் அன்பாக பழகி ரெட்டி யார்சத்திரம் ஒன்றியம் திமு கவை கட்டிக்காத்த சகோதரரை இழந்துவிட் டேன் என்றார். திமுக தலைமை கழகம் அவருக்கு (ப.க.சிவகுருசாமி) தந்தை பெரியார் விருது வழங்கிய போதும், உடல் நலக் குறை வால் சென்னையில் நேரடி யாக அவரால் வாங்க முடிய வில்லை. அவருக்கு பதில் நான் கழகத் தலைவரிடம் வாங்கினேன். இதை என் னால் மறக்க முடியாது. அவ ருக்கு ஒரு பாராட்டுவிழா வைத்து விருதை வழங்க லாம் என்று நினைத்தபோது அண்ணன் மறைந்து விட் டார். அவரின் இறப்பு ரெட் டியார்சத்திரம் ஒன்றிய திமு கவிற்கு பெரும் இழப்பாகும் என்றார்.

முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை தொடர்ந்து முன்னாள் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்கு மார், திண்டுக்கல் பாராளு மன்ற உறுப்பினர் ஆர்.சச்சி தானந்தம் மெர்சி பவுண்டே சன் நிறுவனர் மெர்சி செந் தில்குமார் மற்றும் திண்டுக் கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நட ராஜன், தண்டபாணி, மாவட்டப் பொருளாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன்,

மார்க்கிரேட் மேரி, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழி யன், பிள்ளையார்நத்தம் முருகேசன், இன்பராஜ், பாறைப்பட்டி இராமன், மணி, பொதுக்குழு உறுப்பி னர்கள் அக்பர், கலைரா ஜன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முரு கானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண் ணன், மாவட்ட திமுக தக வல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநா தன், சித்தரேவு கணேசன்,

திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளா ளர் சாணார்பட்டி விஜயன், பேரூராட்சி மன்ற தலைவர் கள் கன்னிவாடி தனலெட் சுமி சண்முகம், அகரம் நந்த கோபால், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா, அய்யம்பா ளையம் ரேகாஅய்யப்பன், நத்தம் சிக்கந்தர்பாட்ஷா, பேரூர் கழக தி.மு.க. செய லாளர் கன்னிவாடி இளங் கோவன், இளைஞரணி அமைப்பாளர்கள் ரமேஷ், காங்கேயன்,

வசந்தகுமார், முன் னாள் ஊராட்சிமன்ற தலை வர்கள் சின்னு (எ) முருகன், அருணாசலம், கரிசல்பட்டி பால்ராஜ், சுந்தரி அன்பரசு, மெர்சி (எ) லெட்சுமி மற் றும் திமுக நிர்வாகிகள் டி.புதுப்பட்டி உதயகுமார், மாணவரணி செல்வம் உட் பட திமுகவினர் பலர் கலந் துகொண்டு மறைந்த ப.க.சிவகுருசாமி உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தி னார்கள்.

இளையான்குடி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர்

மு.மலைமேகு மறைவு!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி

சிவகங்கை, அக்.19-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் மு.மலைமேகு. (வயது 73). விவசாயி. அவர்கள் மறை வெய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம். இளையான்குடி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் மு.மலைமேகு. கழக மூத்த முன்னோடி. இவர் சொந்த ஊர் மெய்யனேந்தல் கிரா மம். மலைமேகு உடலுக்கு முன்னாள் அமைச்சர் சி வகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர். பெரிய கருப்பன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத் தினார்.

அவரது குடும்பத்தி னருக்கு ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங் கைமாறன், முன்னாள் எம். எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென் னடி, ஒன்றிய, செயலாளர் கள் கா.வெங்கட்ராமன், ஆ று . செ ல் வ ர ா ச ன் , வே.தமிழ்மாறன் மற்றும் நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத் தினார்கள்.

நேற்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான அனைத்து துறை அலுவலர்களுக்கான கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்கண்டேயன் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கும் நிலையில் அனைத்து கண்மாயிலும் மதகுகளை ஆய்வு செய்திடவும் மணல் மூடைகள் தயார் நிலையில் இருந்திடவும் அறிவுறுத்தினார்.விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், மும் மூர்த்தி, காசிவிஸ்வநாதன் விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூ ராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ் வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன் மாவட்ட பிரதிநிதி இராமலிங்கம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாய பெருமாள் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; த.வெ.க. நிர்வாகியிடம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள போதை மருந்து பிடிச்சது பத்தி கேட்டதுக்கு, அமைச்சர் கலெக்சன் குமார் , "கடந்த 5 ஆண்டுக ளாக தமிழ்நாட்டில் போதைப்பொருள் அதி கமா நடமாடி இருக்குன்னு" சம்மந்தமே இல்லாம பதில் சொல்லி இருக்காரே பாத் தியா?

பட்டணம் : ஆமாய்யா; கேள்வி கேட்ட உடனே அவர் ஆடிப் போய்விட்டாராம். கட்சிக்காரங்கள பத்தி வெளியே தெரிஞ்சிடுச்சேன்னு, ஏதோ பதில் சொல்லணும்ன்னு அப்படி பதில் சொல்லி இருக்கார். அது சரி, இப்ப 'தூய சக்தி' விஜய்யோட ரியாக்க்ஷனே காணோமே, பாத்தியா?

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!


(17.10.2026)



1. தென்காசி மாவட்டம் கடையம் அருகே ராமச் சந்திர புரத்தில்வீட்டில் தனியாக வசித்து வந்த மூதாட் டியை சராமாரியாக வெட்டி கொலை செய்து 12 பவுன் நகை கொள்ளை ...

2. கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை அருகே முன்விரோதம் காரணமாக விவசாயி சரமாரியாக வெட்டி படுகொலை...

3. தாம்பரம் அருகே வேங்கை வாசலில் முன்விரோதம் காரணமாக கட்டிட



தொழிலாளி சரமாரியாக அடித்து கழுத்தை நெறித்து கொலை ...

4. திருப்பூர் மாவட்டம் சாமுண்டிபுரம் அருகே கல் லூரி மாணவி வீட்டில் புகுந்து மாணவிக்கு சராமரி யாக கத்தி குத்து , வாலிபர் வெறிச்செயல் ....

5. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற பெண் நிர்வாகியை வழிமறித்து அறிவாளால் வெட்டிய மர்மகும் பல் ....



6. சென்னை அம்பத்தூரில் வாடகைக்கு குடியிருந்த தொழிலாளியின் பத்து வயது மகளிடம் பாலியல் சில்மிசத்தில் ஈடுபட்ட வீட்டு உரிமையாளர் சிக்கினார் ...

7. வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே சேவூரில் பெண்களுக்கு ஆபாச எஸ்எம்



எஸ் அனுப்பு செக்ஸ் டார்ச்சர் கொடுத்த வாலிபர் சிக் கினார்...

8. சென்னை பிராட்வேயில் வங்கியில் 36 லட்ச ரூபாய் பணத்தைக் கட்டச் சென்ற நிறுவன ஊழி யரை வழிமறித்து தாக்கி, பணத்தை கொள்ளை அடித்த பெண் உட்பட ஐந்து பேர் சிக்கினர்...

9. குமரி மாவட்டம் கருங்கல் அருகே ஐடி நிறுவன ஊழியர் வீட்டில் தூங்கும் போது 65 சவரன் நகை கொள்ளை ....



10. சென்னை புது வண்ணாரப்பேட்டையில் நகை கடையில் 79 பவுன் தங்கச் சங்கிலிகள் திருட்டு. வட மாநில ஆசாமி கைவரிசை...

11. சென்னை புளியந்தோப்பில் வேலைக்கு சென்று வந்த தனியார் நிறுவன ஊழியரை வழி மறித்து சரமாரியாக தாக்கி செல்போன் மற்றும் பணத்தைப் பறித்த கும்பல்....



12. சென்னை வண்ணாரப்பேட்டை பேசின் பாலம் அருகே சைக்கிள் சென்ற சமையல்காரரை வழிமறித்து கத் தியை காட்டி மிரட்டி பணம் மற்றும் செல்போன் பறிப்பு ....

13. சென்னை செம்மஞ்சேரி அருகே வீடுகள், கோவில் ,சர்ச் ஆகியவற்றில் தொடர் கொள்ளை, பொதுமக்கள் பீதி ...

14. போரூரில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் அம்பத்தூர் மற்றும் மதுரவாயல் தவெக எம்எல்ஏக்களின் ஆதரவாளர்கள் அடிதடி ரகளை ...

15. நாகையில் 135 கோடி மதிப்புள்ள உயர்ரக போதைப் பொருள் பறிமுதல், நாகை தவெக நிர்வாகிக்கு சர்வதேச கும்பலுடன் தொடர்பு, விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்....